UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 - 9 - 24
PERIODICALS
DIVISION
LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | புரட்டாதி 8 | ஜால்-கஃ 13 | இதழ் 225
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 24 - 9 - 80

## மீண்டும் ஜி. சி. ஈ. பரீட்சை: அமைச்சரவை இன்று முடிவு

(கொழும்பு)

இவ்வாண்டு ஏப்ரல், ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற ஜி. சி. ஈ. பரீட்சைகளை மீண்டும் நாடு முழுவதும் நடத்துவதா அல்லது சில பகுதிகளில் நடத்துவதா என்பது குறித்து இறுதி முடிவு இன்று அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜி. சி. ஈ. சாதாரண உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான இடைக்கால அறிக்கை ஒன்றை கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா இன்று அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பார்.

(8-ம் பக்கம் பார்க்க)

★ ஈராக்கின் ஆறு நகரங்களில் குண்டுவீச்சு

★ ஈராக் தரைப்படை முன்னேறுகிறது

★ எண்ணெ விநியோகம் ஸ்தம்பிதம்

# பாக்தாத்திலும் குண்டுமாரி!

# ஈரான் பதிலடி! அறுபது விமானங்கள் சேதம்!

## ஈரானின் மிகப் பெரிய எண்ணெ நிலையம் எரிகிறது!

லண்டன், செப்டம்பர் 23

ஈரான்-ஈராக் யுத்தம் நேற்று உக்கிர நிலையை அடைந்தது! இரு தரப்பிலும் சுமார் அறுபது விமானங்கள் நேற்றுச் சேதமடைந்ததாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவிக்கும் அதேநேரத்தில்; ஈராக்கில் குடிமக்கள் வாழும் பகுதிகளில் ஈரானிய விமானங்கள் நேற்றுக் குண்டுமாரி பொழிந்ததற்கு, 24 மணி நேரத்தில் பதிலடி கிடைக்குமென்று ஈராக் எச்சரித்துள்ளது!

ஈரான் — ஈராக் யுத்தத்தினால் பாரசீக வளைகுடாவிலிருந்து எண்ணெய் விநியோகம் முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. ஈராக்கில் நேற்று ஆறு முக்கிய நகரங்கள் மீது ஈரானிய விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தின என்றும், ஈரானில் அவடானிலுள்ள ஈரானின் மிகப் பெரிய எண்ணெ உற்பத்தி நிலையம், ஈராக் விமானங்களின் குண்டு வீச்சினால் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ★ பிரகடனப்படுத்தப்படாத போர்!

சில வாரங்களுக்கு முன்னர் வெறும் எல்லைச்சண்டையாக முதலில் ஆரம்பமான ஈரான்-ஈராக் தகராறு; இப்பொழுது பிரகடனப்படுத்தப்படாத யுத்தமாக மூண்டுள்ளது. யுத்தத்தை இரண்டு நாடுகளும் பிரகடனப்படுத்தாதபோதிலும், சண்டை முழுஅளவில் நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இன்றுள்ள நிலைமையில் ஈரான், ஈராக் எந்தநேரத்திலும் யுத்தத்தை பிரகடனப்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

### ★ 54 விமானங்கள் சேதம்!

தெஹ்ரான் வானொலியும், பாக்தாத் வானொலியும் நேற்று ஒலிபரப்பிய செய்திகளின்படி; இரு தரப்பிலும் நேற்று 54 விமானங்கள் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது. ஈராக்குக்குள் தாக்குதல் நடத்திய இருபது ஈரானிய விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன என்று பாக்தாத் வானொலியும்; ஈரானுக்குள் தாக்குதல் நடத்திய முப்பத்துநான்கு ஈராக் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று தெஹ்ரான் வானொலியும் நேற்று அறிவித்தது.

### ★ இந்திய நிதிஅமைச்சர் சென்ற விமானம்

அரசாங்க விஜயமாக நேற்று ஈராக் புறப்பட்ட இந்திய நிதிஅமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், குவைத்போய்ச் சேர்ந்தார். திரு. வெங்கட்ராமன் சென்ற விமானம், ஈராக் தலைநகர் பாக்தாத்துக்குள் நுழையமுடியாத காரணத்தால் அவரது விமானம் குவைத்துக்கு திசைதிருப்பப்பட்டது.

### ★ ஈராக் படைகள் முன்னேறியதும்....

ஈராக் தரைப்படைகள் ஈரானுக்குள் வெற்றிகரமாக முன்னேறிய சிலமணி நேரத்தில், ஈராக் தலைநகரான பாக்தாத்தில் விமானத் தாக்குதலை ஈரானிய விமானங்கள் நடத்தின என்றும், பாக்தாத்தில் மட்டுமின்றி ஈராக்கின் வடக்கு, தெற்கு பகுதிகளிலுள்ள ஆறு முக்கிய தலைநகரங்களில் ஈரான் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின என்றும் அறிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலினால் நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் பலியானார்கள்.

### ★ பிரிட்டிஷ் பிரஜைகள் பலி

ஈராக்கிலுள்ள சில எண்ணெய் ஆலைகள் மீதும் ஈரானிய போர் விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தின. ஈராக் பெட்ரோலிய இரசாயன தொழிற்சாலை மீது ஈரானிய விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தியதில் இரண்டு பிரிட்டிஷ் பிரஜைகள் பலியானார்கள் இத்தகவலை பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சு நேற்று ஊர்ஜிதம் செய்தது.

### ★ இஸ்ரேலிய வானொலிச் செய்தி

இஸ்ரேலிய இராணுவ வானொலி நேற்று ஒலிபரப்பிய செய்தியில்; ஈராக் துருப்புகள் ஈரானின் எல்லைக்குள் ஆறு மைல் தூரம் வரை ஊடுருவிட்டன என்றும், ஈரானிலுள்ள எண்ணெய் உற்பத்தி நிலையங்களைத் தாக்குவதே இவர்களின் குறிக்கோள் என்றும் தெரிவித்தது.

### ★ ஐ. நா. செயலாளர் கவலை

ஈரான் — ஈராக் யுத்தம் பற்றி ஐ. நா. பிரதம செயலாளர் கலாநிதி வால்ட் ஹெய்ம் கவலை தெரிவித்துள்ளார்.

(6-ம் பக்கமும் பார்க்க)

## கொழும்புத்துறை கொலை: பதினொருபேர் கைது!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் பலியான அருணசலம் குமாரவேலுவின் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் மீது 4 பேர் கைது செய்யபப்பட்டுள்ளனர். இதே கோஷ்டி மோதலில் பலியான மற்றொரு நபரான கதிரவேலு யோகசாமியின் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் மீது 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த 11 சந்தேகநபர்களும் யாழ். பதில் நீதவான் திரு. சி. அமிர்தலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபொழுது அவர்களை அடுத்த மாதம் 3ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், பிரேத பரிசோதனை நடத்தும் படியும் கட்டளையிட்டார்.

இக்கோஷ்டி மோதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 11 சந்தேக நபர்களுக்கும் காயங்கள் உள்ளதால் அவர்கள் சிறைச்சாலை ஊழியர்களின் பாதுகாப்புடன் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்கள். (வெ)

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

புதுடில்லி செப். 23

இந்தியாவில் புதிதாக அமுலுக்கு வந்துள்ள தேசிய பந்தோபஸ்து அவசரச் சட்டம் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதுபோன்ற ஒரு சட்டத்தைப் (மிசா) பயன்படுத்தியே திருமதி இந்திரா காந்தி முன்னர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமது பல்லாயிரக் கணக்கான அரசியல் எதிரிகளைச் சிறையிலிட்டுப் பழி வாங்கினர் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளனர்.

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000,—க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லஇன செவ்விளநீர்தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு மில்க்வைற், யாழ்ப்பாணம். 6876

ஐஸ்கிறீம் மெஷின் மேல் கியர் கிறீம் மீற்றருடன்நான்கு தட்டு ஐஸ்கிறீம் மெஷின் உடனே விற்பனைக்கு. சுவீற்றீ கூல், பண்டத்தரிப்பு. 6909

சண்டிலிப்பாயில் 18 பரப்பு விற்பனைக்கு. தொடர்பு: அளகரத்தினம், வடக்கு சண்டிலிப்பாய், 6919

ஈச்சமோட்டையில் இரண்டு பரப்புக்காணி. விபரங்கள்: தியாகராசா, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, 6911

## ஏல விற்பனை

### மாநகரசபை, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான மூவாயிரத்து ஐநூற்றுஐம்பது (3550)தென்னங்கிடுகுகள் 30-09-1980 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9-30 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் தற்காலிக சந்தை வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்திபெறும் கேள்விக்காரர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி கிடுகுகளை அப்புறப்படுத்த வேண்டும்.

க. சிவஞானம்,
யாழ். மாநகர ஆணையாளர்,

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-09-1980 6914

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணி & நொத்தாரி
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம், திருநெல்வேலி தெற்கு, இல:340,குமாரசாமிறோட்டு குமாரசாமி சுந்தரலிங்கம் என்பவரின் ஆதனங்களும், பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

சுந்தரலிங்கம் கைம்பெண் தெய்வநாயகி,
இல:340,குமாரசாமிறோட்டு
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
— மனுதார்

இல: தத்துவம் 3553

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைவு:
ஒப்பம்
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி.
6773

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட
நீதிமன்றில்

காலஞ்சென்ற தொண்டமனாறு விவேகானந்தன் மகள் விஜயலக்சுமியின் மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்
மரணசொத்து )
நியாயாதிக்க )இல: 1098 T-

துரைசாமி விவேகானந்தன்-தொண்டமனாறு.
மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்.

வரைதல்
சி. நாகலிங்கமுதலி,
மனுதாரின் சட்டத்தரணி.
6898

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

### முத்திரைச் சந்தையிலுள்ள கடை அறைகளுக்கான குத்தகை 15-10-1980-ல் இருந்து 31-12-1981 வரை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான முத்திரைச் சந்தையில் உள்ள கடைகளை 15-10-1980 முதல் 31-12-1981 வரையிலான காலத்திற்கு குத்தகையில் கொடுப்பதற்கான கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 09-10-1980-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் அதற்கென விதிக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் மாநகராட்சி மன்ற அலுவலகத்திலிருந்து 08-10-1980-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் இவ் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி
மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-09-1980. 6913

## இல்ல விளையாட்டுப் போட்டி

(மட்டுவில்)

வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈஸ்வரபாதம் தலைமையில் நாளை நடைபெறும்.

## சமத்துவ வழிபாடு

(மட்டுவில்)

மந்துவில் கேலம் அம்பாள் கேலம் பிள்ளையார், தனங்கிளப்பு பனங்காய்குளம்பிள்ளையார், சுண்டிக்குளம் பிள்ளையார் ஆலயங்களில், அறவழி போராட்டக்குழுவின் முயற்சியால் சமத்துவ ஆலயவழிபாடு நடைபெற்றன.

## 'ஹொண்டாவின்' துரிதவேகம் இயமனானது!!

(யாழ்ப்பாணம்)

புதிய ''ஹொண்டா'' மோட்டார் சைக்கிளில் துரித வேகத்தில் சென்ற வாலிபர் எதிரே வந்த மாணவர்களைக் காப்பாற்ற வேகத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்த போது பாதையைவிட்டு விலகி மரத்தில் மோதியதால் மரணமானார்!

புங்குடுதீவைச் சேர்ந்த கதிரவேலு புவனசுந்தரத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது:

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

வீதியில் மாணவர்கள் வந்ததாகவும், 'அவர்களைப்-பாதுகாப்பதற்கு முயற்சித்த போதே இச்சம்பவம் நடந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கபட்டது. (க)

## நாளை பெற்றார் தினமும் பரிசளிப்பும்

(பலாலி)

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலைப் பெற்றார் தின விழாவும், பரிசளிப்பு வைபவமும் நாளை புதன் கிழமை நடைபெறுவதற்கு விரிவான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

மில்க்வைற் தொழிலதிபர் சிவநெறிக்காவலர் க. கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு முதன்மை மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்குவார். மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். தனஞ்செயன், ஏழாலை தெற்கு திருச்சபை பங்குக்குரு வண. எஸ். சுப்பிரமணியம் அடிகளாரும், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கணக்காளர் திரு. கே. மகாதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். விழாவின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக ஏழாலை முத்தமிழ் மன்றத்தாரின் நாடகங்களும் நடைபெறவுள்ளன. இவ்விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் பாடசாலை அதிபர் திரு. ஏ. நவரத்தினமும், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிருவாகக் குழு உறுப்பினர்களும் கவனித்து வருகின்றனர்.

நீண்ட கால இடைவெளியின் பின் இவ்விதமான விழா இப்பாடசாலையில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நாடும் நடப்பும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டி பொது மலசல கூடம் தொடர்ந்தும் இருக்க வேண்டுமானால் சுத்தமாக வைத்திருக்கவேண்டியது அவசியம். சுத்தமாக வைத்திருக்க முடியாவிட்டால் அதை இடித்துத் தகர்த்து விடுவதேமேல்.

கன்னாகிட்டி பொது மலசல கூடத்திலிருந்து வெளிவரும் துர்நாற்றமும் அதன் அசுத்தமும் கன்னாகிட்டிப் பகுதியில் மட்டுமல்ல யாழ் நகரத்திலேயே தொற்று நோய்களைப் பரவச்செய்துவிடும். நகர பிதாக்கள் சிலரும் நகர முதல் [illegible] சென்று வருகிறார்கள். அவர்கள் [illegible] வாகனங்களில் செல்வதால் துர்நாற்றம் அவர்களின் மூக்கிற்குக் கிட்டவும் எட்டுவதில்லைப் போலும்!

— ஊர்சுற்றி

# இந்தியாவுக்குச் சலுகை விலையில் எண்ணை

## நைஜீரியாவும் இணக்கம்

புதுடில்லி, செப் 23

எண்ணை உற்பத்தி ஏற்றுமதி நாடுகளிடமிருந்து சலுகை விலையில் எண்ணை இறக்குமதி செய்யும் இந்தியாவின் முயற்சிக்கு அல்ஜீரியாவும் ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

இதுதொடர்பான இந்தியாவின் கோரிக்கையை நைஜீரிய அதிபர் ஏற்றுக் கொண்டுள்ளதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவராக நைஜீரியா சென்று திருப்பிய முன்னாள் வெளிநாட்டமைச்சர் திரு பி.சுவரண் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு சலுகை விலையில் எண்ணை விநியோகம் செய்ய ஏற்கெனவே இந்தோனேஷியா இணக்கம் தெரிவித்துள்ளது. தெரிந்ததே. (இ)

# 'தனிநாடு' அமைக்க பாலஸ்தீன மக்கள் தாயகம் திரும்பவேண்டும்

## அரபாத்துக்கு இந்திரா கடிதம்

புதுடில்லி, செப். 23

பாலஸ்தீன மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் தமக்கென தனி நாடு ஒன்றை அமைக்கவும் அவர்கள் தமதுதாயகம் திரும்ப அனுமதிக்கப்படவேண்டும்.

பாலஸ்தீன மக்களின்உரிமைகளை மீட்டுத்தராவிடின் உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் தொடர்ந்து அபாயம் ஏற்படும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜெரூஸலத்தை சட்டவிரோதமாகத் தன்னுடன் இணைத்து அதன் கலாச்சாரத்தை மாற்றி தனது தலைநகராக்க இஸ்ரேல் மேற்கொள்ளும் முயற்சி மத்திய கிழக்கில் ஏற்கனவே உள்ள நிலைமையை தீவிரப்படுத்திஉள்ளது என்றும் தி மதி. காந்தி தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

# "பொய்யை ஏவிவிடாதீர்கள் அது என்னைப்பொசுக்காது"

## கவிஞர் காசி அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''என்மீது அண்மையில் ஏனோ பலரும் அக்கறைகொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். மாவட்ட அபிவிருத்தி சபையை நான் ஆதரித்த பிறகு சிலர் என்னுடைய சுயகௌரவத்தை மாசுபடுத்தும் வகையில் விஷமச் செய்திகளை மக்கள்முன் பரப்ப முயல்கிறார்கள்'' என்று திரு.காசி ஆனந்தன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:

''தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு விடுதலை இயக்கம் அல்ல- அரசியல் கட்சியே!'' என்று நான் பொதுச்சபையில் கூறியதாக ஒரு பத்திரிகை செய்திவெளியிட்டது.

''இப்பொழுது போராடக்கூடிய சூழ்நிலை இல்லை-எனவே மாவட்டசபையை ஏற்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை! என்று நான் பொதுச்சபையில் பேசியதாக இன்னுமொரு செய்தியை வேறொரு பத்திரிகை வெளியிட்டுள்ளது.

''இப்போது ஒரு பத்திரிகை நான் 'இரட்டை வேடம்' போடுவதாக எழுதுகிறது. 'சுடர்' பத்திரிகை மாவட்ட அபிவிருத்தி சபையைத்தாக்கி ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கிறதாம். நான்தான் 'சுடர்' பத்திரிகையின் ஆசிரியராம்- வெளியே கூட்டங்களில் மாவட்ட அபிவிருத்தி சபையை ஆதரிக்கும் நான் 'சுடர்' பத்திரிகையில் எப்படி மாவட்ட அபிவிருத்தி சபையை எதிர்க்க முடியும்?- இது இரட்டை வேடமல்லவா?'' என்று அந்தப்பத்திரிகை எழுதுகிறது. 'சுடருக்கும்' எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதை மக்களுக்கு பணிவன்போடு அறியத் தருகிறேன்- எனது பெயரை 'சுடர்' பத்திரிகை 'ஆசிரியர்' என்று போட்டு பயன்படுத்துகிறது. என்னுடைய பெயரை அதில் இருந்து அகற்றுமாறு, நான் 'சுடர்' உரிமையாளருக்கு எழுதியிருக்கிறேன். பொய்யை என்மீது ஏவிவிடாதீர்கள்- பொய் என்னைப் பொசுக்காது! என்று திரு. காசிஆனந்தன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வேலை நிறுத்தத்துக்குத் தடை

புதுடில்லி, செப். 23

குஜராத்தில் அரச ஊழியர் வேலைநிறுத்தத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநில செயலக ஊழியர் வேலை நிறுத்தத்தை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் செய்த 5 ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்: (இ)

## மாணவி, தற்கொலை

(யாழ்ப்பாணம்)

காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்ததால் 18 வயது இளம்பெண் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த கனகரத்தினம் வசந்தியின் மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல்தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ், எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இளைஞர் ஒருவரை வசந்தி காதலித்ததாகவும். திருமணம் செய்யப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம். எச். பி. பெர்னாண்டோ இம்மாதம் தொடக்கம் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய திரு. ஏச். பிரேமதாசா நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மாறாத பக்தியும் உறுதியான விசுவாசமும் உனக்கு அருளுமாறு வேண்டி ஜகன்மாதாவைப் பிரார்த்தனை செய்வாயாக.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### மிஷன் பொன் விழா

'மிஷன்' என்ற பதத்தை யாழ்ப்பாண மக்கள் சந்தேகக்கண் கொண்டு பார்த்த காலம் ஒன்றிருந்தது. அந்நிய மதத்தினர் மதமாற்றஞ் செய்தலில் ஈடுபட்டிருந்ததால் அவ்வித துவேஷம் அந்த அர்த்தம் நிறைந்த சொல்லுக்கு இருந்தது வியப்பில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் என்றால் அதுவேறு விடயம். இந்த நாடு முழுவதுமே ஒரு பாலைவனம் போற் காட்சியளிக்க நேரிடின் அதன் பசுந்தரை 'கொழும்பு ராமகிருஷ்ண மிஷன்' என்றால் அது எவ்விதத்திலும் மிகையாகாது.

இன்று பொன் விழாக் காணும் கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் இந்த நாட்டின் பல்வேறு இனத்தவர் மதத்தவர் அனைவரையும் தேசிய ஒருமைப் பாட்டில் வளர்க்கும் தலைசிறந்த சாதனம் என்று நாம் பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம்.

அரசாங்க அமைச்சர்கள் தொடக்கம், வாழ்வின்தாக்கங்களால் அல்லற்படும்தனி மனிதன் வரைக்கும் மனச்சாந்தி பெற உதவும் 'தபோவனமே' இன்று பொன்விழாக்காணும் இந்த உன்னத ஸ்தாபனம்.

அவ்வாறு அமைந்ததற்குக் காரணம் எவரும் அறிந்த, அல்லது அறிந்திருக்க வேண்டிய தொன்று.

1893-ம் ஆண்டு செப்டம்பர் 11-ம் தேதி அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ நகரத்தில் நடந்த சர்வசமய பாராளுமன்றத்தில் ஞான மழைபொழிந்த சுவாமி விவேகானந்தர் வெற்றிவாகை சூடி நாடு திரும்பும்போது இலங்கை மண்ணில் கால் வைத்தார். இதுவே இந்தக் கொழும்பு மிஷனுக்கு அவர் இட்ட பெரும் வித்தாகும்.

''மெய்வகையதிது
வென்ன
வேண்டியவர்
வேண்டியன
அவ்வகைய தெய்வமு
மாய் அளிப்
பேனும் யானே காண்''

என்ற கீதா உபதேசத்தை உலக சமய பாராளுமன்றத்தில் உரைத்தவர். சுவாமி விவேகானந்தர் தமது உலகப் பிரசித்தி பெற்ற பேருரையை எவ்வாறு முடித்தார்? ''இன்று காலையிலே இந்தப் பெருமன்றம் கூடும் பொழுது அடித்த மங்கல மணியானது மூடக் கொள்கைகளின் சாவுமணியாகுக!''

வேதாந்தம் வேறு சித்தாந்தம் வேறு என்று நுணுக்கமான கருத்துக்கள்கொண்டு முட்டையில் — பிடுங்கி வாதமிட்ட காலம் ஒன்று யாழ்ப்பாணத்திலும் இருந்தது. ராமகிருஷ்ண மிஷன் முதற் காரியதரிசியாக யாழ்ப்பாணத்திலிருந்து கடமையாற்றிய சுவாமி விபுலாநந்தர் இதற்குச் சாவு மணியடிக்க அருஞ்சேவை செய்தார்.

கீதைக்கு ஒத்த அருணந்தி ...

# இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் கல்விப்பணிகள்

**(இராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் உருவாகி ஐம்பதாண்டுகள் நிறைவுபெறுவதையொட்டி இவ்வாரம் பொன்விழாக் கொண்டாடப்பெறுகிறது- இவ்வைபவத்தையொட்டி இக்கட்டுரை வெளியிடப்பெறுகிறது - ஆர்)**

**ச. அம்பிகைபாகன்**
(வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபர்)

இராமகிருஷ்ண சங்கம் இந்தியாவிலும் இலங்கையிலும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. அவற்றுள் கல்விப்பணியே சிறந்ததெனக் கொள்ளலாம். மேனாட்டு நாகரிகத்திலும் அஞ்ஞானத்திலும் மூழ்கி இருந்த மக்களுக்குப் புது வாழ்வளிப்பதற்குக் கல்வியே சிறந்த சாதனமெனச் சுவாமி விவேகானந்தர் கருதினார். இதனாலேயே இராமகிருஷ்ண சங்கத்தைக் கல்விப்பணியில் ஈடுபடும்படி ஊக்குவித்தார்.

இலங்கையில் இராமகிஷ்ண சங்கத்தின் கல்விப்பணி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தை 1918 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதோடு ஆரம்பித்தது. இவ்வித்தியாலயத்தை ஆசிரியர் திரு. ரி. நாகமுத்து 1913 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். ஐந்து வருட காலம் அரசாங்கத்தின் அங்கீகாரமும் நன்கொடையும் கிடைக்காதபோதிலும் திட நம்பிக்கையுடன் நடாத்திவந்தார். பின்னர் அன்பர்களின் ஆலோசனைப்படி இவ் வித்தியாலயத்தை இராமகிருஷ்ண சங்கத்திடம் 1917 ஆம் ஆண்டில் ஒப்படைத்தார். இதனை இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாகப் பொறுப்பேற்றவர் மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்துக்குத் தலைவராயிருந்த சுவாமி சர்வானந்தா ஆவர். அக்காலத்தில் இராமகிருஷ்ண சங்கத்தின் கிளை இலங்கையில் ஸ்தாபிக்கப்படாத படியால் இவ்வித்தியாலயத்தை நிர்வகிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு நிருவாகசபையை நிறுவி அதனிடம் சுவாமிகள் ஒப்படைத்தார். இச்சபை மூன்று வருடம் நடத்தியபின்பே அரசாங்கத்தின் அங்கீகாரமும் நன்கொடையும் கிடைத்தன.

இப்படி ஒரு வித்தியாலயத்தோடு ஆரம்பித்த கல்விப் பணி, பல்கிப் பெருகுவதற்குக் காரணமாயிருந்தவர் சுவாமி விபுலாநந்தராவர். இவர்கள் 1922 ஆம் ஆண்டில் தாம் வசித்துவந்த மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் பதவியைத் துறந்து இராமகிருஷ்ண சங்கத்திற் சேர்ந்தார். இவர்களுக்குச் சந்நியாச தீட்சை 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதத்திற் கொடுக்கப்பட்டது. ஒருவருட காலம் மேலும் மயிலாப்பூர் மடத்தில் தங்கிவிட்டு 1925 ஆம் ஆண்டு மார்ச்மாதம் இலங்கைக்கு வந்தார்கள்.

சுவாமி விபுலாநந்தர் இலங்கைக்கு வந்ததும் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களில் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாகப்பல்வேறுசபைகள் நடாத்திவந்த பாடசாலைகளுக்கு முகாமைக்காரரானார்கள். இதோடு கிழக்குமாகாணத்தில் கல்வித்துறையிலும் சமயத்துறையிலும் ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் அவர்களின் அரும் முயற்சியினாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்தே சைவப்பள்ளிக்கூடங்கள் தோன்றலாயின. ஆனால் திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களில், சுவாமி விபுலாநந்தர் அங்குக் கல்விப்பணியில் ஈடுபடும் வரைக்கும் சைவப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி சீராக அமையவில்லை. மட்டக்களப்பில் சுவாமிகள் சிவானந்த வித்தியாலத்தைத் தாபிக்கும் வரைக்கும் அங்கு ஒரு சைவ -ஆங்கில பாடசாலையிருக்கவில்லை.

விபுலாநந்த சுவாமிகள் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் 1925 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 6 ஆந் திகதி சிவானந்த வித்தியாலயத்துக்கு அத்திவாரக்கல் நாட்டினார்கள். இதே காலத்தில் தான் திருக்கோணமலை இந்துக்கல்லூரி புதிய கட்டட வேலையையும் ஆரம்பித்தார்கள்.

சிவானந்த வித்தியாலயக் கட்டட வேலை நடந்துகொண்டிருக்கும் காலத்தில் சுவாமிகள் திருக்கோணமலை இந்துக் கல்லூரிக்கு அதிபராகவிருந்து அக்கல்லூரியை வளர்த்துவந்தார்கள். இக்காலத்தில் திரு. மா. பீதாம்பரனார் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் சுவாமிகளுடன் உடனுறைந்து திருக்கோணமலையில் சைவக்கல்வியை வளர்ப்பதற்கு உதவிபுரிந்தார்கள்.

சிவானந்த வித்தியாலயத் திறப்புவிழா 1929 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. இதன்பின்னர் சுவாமிகளின் முழு ஆற்றலும் இவ்வித்தியாலயத்தை வளர்ப்பதிலே செலவிடப்பட்டது ...

## மாவட்ட அபிவிருத்திசபைகள்

எதிர்ப்புகளின் மத்தியில் பிறக்க இருக்கும் குழந்தை மாவட்ட அபிவிருத்திசபை. பல்வேறு அரசியல் கட்சிகளினாலும் மக்களிடையே பலவிதமான கருத்துகள் பரப்பப்படுகின்றன. பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டம் எதிர்ப்புக்களையும் கருத்து வேறுபாடுகளையும் மூழ்கடித்து விட்டதே என்று கூறலாம்.

இப்பொழுது மாவட்டசபைகளின் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதே மக்களின் ஆவலாக உள்ளது. பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின் நாட்டில் பெரும் பரபரப்பையும் அரசியல் கட்சிகளின் பிரச்சார வேகத்தையும் நாம் விரைவில் காணும் வாய்பு ஏற்படப்போகிறது.

கிராமசபைகள் பட்டின சபைகளை அழித்துப் புதிதாக மலரும் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பாடசாலைகள். காணிப்பங்கீடு, மராமத்துப் பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள குட்டிப்பாராளுமன்ற அமைப்பைக் கொண்ட ஒரு நிர்வாகசபையாகும்.

தென்னிலங்கையுடன் ஒப்பிடும்பொழுது தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி மிகவும் பின்தங்கியே உள்ளது. வெளிநாட்டு உதவியுடன் எமது பிரதேசத்தில் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள மாவட்ட அபிவிருத்திசபைகள் முயற்சி செய்யும் என்றே நம்பலாம்.

அடிக்கடி நினைவூட்டி சமரச மனப்பான்மையை வளர்த்தவர் தமிழ்ப் பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர்.

''யாதொரு தெய்வங்
கொண்டீர்
அத்தெய்வமாகி
ஆங்கே மாதொரு பாக
னார்தாம்வருவர்''

மட்டக்களப்பில் பிறந்து யாழ்ப்பாணத்துக்கும், இலங்கை, இந்தியா, தமிழுலகனைத்துக்கும் ஞானஒளியாய் விளங்கிய சுவாமி விபுலாநந்தர், தமிழ்மக்கள், சைவமக்களிடம் ஒற்றுமையை வளர்த்ததல்லாமல், அவர்களின் சேவை உலகத்துக்கும் ஞான ஒளியைவீச அவதரித்த ஸ்ரீ ராமக்கிருஷ்ணரின் சேவையை மக்கள் தொண்டில் மகத்தான இடம்பெறச் செய்தார்.

இன்று பொன்விழாக்காணும் கொழும்பு மிஷன் ஸ்தாபனத்தின் தலைவரான சுவாமி பிரேமாத்மானந்தஜி அவர்களும் யாழ்ப்பாணத்தின் அருந்தவப் புதல்வன். அவரும் துறவுபூண்டு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாயின. இவ்விரு பொன் விழாக்கள் ஒன்றிணைந்து நிகழும் தனித்துவ வைபவம் நாட்டின் ஆத்மீக, கலாசார சரித்திரத்தில் ஒரு முக்கிய இடம் பெறுகிறது.

நாட்டில் மட்டுமல்லாமல் அனைத்துலகிலுமே பல்வேறு பகைமையும் பிளவும், விரோதமும் குரோதமும் மலிந்திருக்கும் இக்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் போதனையும் சாதனையும் எவ்வளவு அவசியமென்பதை இந்த வைபவம் ...

### மக்கள் கருத்து

யாழ். குடாநாடு வெடித்து விடுமோ என்ற அளவில் சன நெருக்கம் கூடியுள்ளது - ஒரு பரப்பு நிலத்தின் விலை ஒரு லட்சம் ரூபாவரை அதிகரித்துவிட்டது. வீடுகளும் அரசாங்கக் கட்டிடங்களும் நெருக்கமாகக் கட்டப்பட்டு நகரின் சூழலே கெட்டுவிட்டது - சுத்தமான காற்றும் நீரும் கிடைக்க வழியில்லை.

உவர் நீராக மாறும் நீர்நிலைகளை நன்னீராக மாற்றுவதும் குடா நாட்டின் பிரதான திட்டமாக அமைதல்வேண்டும். வீதி விபத்துகளைத் தடுக்க சந்திகளும் கோணலான வீதி முடக்குகளும் விசாலிக்கப்படல்வேண்டும்.

**வடக்கின் தலைநகராக .....**

வடமாகாணத்தின் தலை நகராக கிளிநொச்சி அபிவிருத்தி செய்யப்படல்வேண்டும்- விளையாட்டுத் திடல்கள், அரசாங்க ஊழியருக்கான விடுதிகள் அமைக்கப்படல் வேண்டும். கிளிநொச்சி ஆஸ்பத்திரி தரமுயர்த்தப்பட்டு நவீன ஆஸ்பத்திரியொன்று பேராதனையில் ஜப்பான் உதவியுடன் கட்டப்பட்டதுபோல் நிர்மாணிக்கப்படல்வேண்டும். உல்லாசம் பயணிகளையும் உள்ளூர் வாசிகளையும் கவர உயர் நிலை தாவரவியல் பூங்கா ஐம்பது ஏக்கர் ... நிலப்பரப்பில் அமைதல் விரும்பத்தக்கதாகும். சகல அரசாங்க திணைக்களங்களும் புதிய புதிய கட்டடங்களும் கிளி ...

## நாடும் நடப்பும்

''சுவாமியும் மற்றொருவரும் வருகிறார்கள். இரண்டு பேருக்கு உணவுக்கு ஏற்பாடு செய்யும்படி மிஸ். விஜயரத்தினம் டீச்சரிடம் போய்சசொல்லு''

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது நடந்த சம்பவம் ஒன்று இராமகிருஷ்ணமிஷன் பொன்விழாக் கொண்டாடும் இந்நாளில் நினைவுச்கு வருகிறது. பழைய நிகழ்ச்சிகளை இரைமீட்பதில் உள்ள மகிழ்ச்சியே தனி!

சீனிவாசக மாஸ்டர் சொல்லியனுப்பியதை அப்படியே போய் விஜயரத்தினம் டீச்சரிடம் சொல்லியிருக்கலாம்.

அந்தநாளிலேயே நான்வெகு புத்திசாலியென்று எனக்கொரு எண்ணம். அதிகப் பிரசங்கித்தனம் என்றும் சொல்லலாம்!

சுவாமியுடன் மற்றொருவர் வருவதாகச் சொன்னபோது இன்னும் இரண்டுபேர் சுவாமியுடன் கூட வராமலா இருக்கப்போகிறார்கள் என்று எனக்குள்ளேயே தீர்மானித்துக் கொண்டேன்.

சுவாமியும், இன்னும் இரண்டு மூன்றுபேரும் வருகிறார்களாம். அவர்களுச்கு சாப்பாடு ஏற்பாடு செய்யட்டுமாம் என்று டீச்சரிடம் சொல்லி விட்டு வந்தேன்.

மறுநாள் காலை பாடசாலைக்குச் சென்றேன். வகுப்புக்கு வந்த டீச்சர் என்னைக் கூப்பிட்டு ''வீட்டில் பழைய சோறு இருக்கிறது. நீதான் போய் சாப்பிட்டு முடிக்க வேணும்'' என்று மற்றப் பிள்ளைகளுக்கு முன்னால் சொன்னார்.

நான் விழித்தேன், சக மாணவிகளும் புரியாமல்விழித்தனர்.

பின்னர் டீச்சர் விளக்கம் கொடுத்தார். சுவாமியும் மற்றொருவரும் வருகிறார்களென்பதை மூன்று பேராகக் கூட்டிச் சொன்னதன் விளைவு உணவு பெருமளவில் எஞ்சிவிட்டது.

சோறு மிஞ்சினால் பரவாயில்லை; தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தால்...'' என்று நான் சமாளித்தேன்!

டீச்சர் சிரித்தார். பிறின்சிப்பல் அம்பிகைபாகனும் எனது புத்திசாலித்தனத்தை அறிந்து சிரித்துக்கொண்டார்.

சுவாமி என்பது விபுலாநந்த அடிகளார். அவர் மட்டக்களப்பிலிருந்து அடிகளார் வரும்சமயங்களில் அவரை ரயில்நிலையத்திலிருந்து வித்தியாலயத்துக்கு அழைத்துவந்து தங்கவைத்து மணிஐயர்வீட்டிலி (இப்போது தம்பிரான் சுவாமிகள்) ருந்து சாப்பாடு எடுத்துக்கொடுக்கும் பாக்கியம் சில நேரத்தில் எனக்குக்கிடைத்தது. பின்னர் சுவாமி நடராஜானந்தாவுக்கும் இப்படிச் சேவை செய்யும் பாக்கியம் சில நேரங்களில் கிடைத்தது!

மகான்களுக்குத் தொடர்ந்து தொண்டு செய்வதற்கும் கொடுத்து வைத்திருக்கவேண்டும். தலைச்சுழி வேறுவிதமாக அல்லவா எனக்கு அமைந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண நகரின் மத்தியில் மக்கள் நடமாட்டமும் வதிவிடங்களும் வியாபார நிறுவனங்களும் நிறைந்த நெருக்கமான பகுதியில் மூக்கைப் பொத்திக்கொண்டு போக வேண்டிய அவல நிலையை என்னவென்பது.

நகைக்கடைகள் நிறைந்த கன்னாதிட்டியில் பொது மலசல கூடமொன்று இருக்கிறது. இந்த மலசலகூடம் அந்தக் காலத்தில் அவசியமாக இருந்திருக்கலாம். இன்று கடைகள் வீடுகள் வெவ்வொன்றிலும் மல ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அபிவிருத்தியில் பொது மக்களின் பங்களிப்பு

**யோகேந்திரா துரைசுவாமி**

யாழ். மாவட்ட அரச அதிபரும், மாவட்டஅமைச்சின் செயலாளரும்

பொது மக்களின் நலன் கருதி நடத்தப்படும் ஆட்சியில் பொது மக்களின் பங்கு பற்றல் பெருமளவு இருக்க வேண்டும் என்பது எமது ஜனாதிபதியினது உறுதியான கொள்கையாகும். கூடியளவுக்கு நிர்வாகக் கோட்பாடுகளும் அபிவிருத்திகளும் பொது மக்களின் ஆலோசனைகளின் அடிப்படையிலே அமைய வேண்டும் என்ற கருத்து தற்போது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. நிர்வாகத்தை ஓரிடத்தில் முற்ருகக் குவித்து வைக்காமல் பரவல் படுத்தியும் நிதி ஒழுங்குகளைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அடிப்படையில் மாற்றி அமைத்தமையும் இதன் பொருட்டே ஆகும் என்பதனை யாவரும் அறிவோம். இந்தத் தன்மையினை யாழ். மாவட்ட நிர்வாக பொருளாதாரப் போக்குகளில் இப்போது மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. பொதுமக்கள் தங்கள் பிரதேச அபிவிருத்தியிலே தாங்கள் வகிக்கின்ற பாத்திரத்தை வெகு தெளிவாகவே உணர்ந்து செயற்பட்டு வருவதை யாவருமே காணக் கூடியதாக உள்ளது.

1979-ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் மாவட்ட அமைச்சு நிறுவப்பட்டது. முதலாவது மாவட்ட அமைச்சின் செயலாளராகவும் பின்னர் அதனோடு சேர்த்து அரசாங்க அதிபராகவும் நான் நியமிக்கப்பட்டேன். இம்மண்ணில் பிறந்தவனுகிய யான் யாழ். மாவட்டத்துக்குரிய விஷேச இயல்புகளை அறிவேன். அபிவிருத்தியினைக் கோரி நிற்கின்ற யாழ். மாவட்டக் கிராமத்தின் தேவைகளை ஏற்கனவே உணர்ந்திருந்தவன் நான். இதன் காரணமாகவே ஏனைய இடங்களிலே வாரத்தில் ஒரு முறை தான் பொது மக்கள் செயலாளரை சந்திக்க உள்ள முறையை இரண்டு தினங்களாக விஸ்தரித்தோம். திங்கள் புதன் ஆகிய இரு தினங்களிலும் பொது மக்கள் பெருமளவிலே தங்கள் கோரிக்கைகளுடன் மாவட்ட அமைச்சுக்கு வருகிறார்கள். தங்கள் பகுதியிலே செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி இவர்கள் திறந்த மனத்துடன் தெரிவிக்கின்றார்கள் இதனைவிட இந்நாட்களிலே பலதூதுக் குழுக்களும் தங்கள் தேவைகள் தங்கள் பகுதி அபிவிருத்திகள் சம்பந்தமாக மகஜர்களுடன் என்னைவந்து பேட்டி காணுகின்றனர். அவர்களது தேவைகள் ஆலோசனைகள் ஆகியன பற்றி ஆராய்கின்ற போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் அவ்விடத்திலே சமூகம் கொடுக்கின்றார். முன்பு வெறும் அறிக்கைகளைப் பெற்று ஏற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளே அமுல் நடத்தப்பட்டன. இப்போதோ நிலைமை மாறியுள்ளது. இந்தச் சந்திப்பு முறைகளின் பயனுக மக்களின் உண்மையான பிரச்சினைகள் என்ன முதலில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என்ன என்பதனை அறிந்து உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தூதுக்குழுக்கள் நெடுந்தீவு முதல் அக்கராயன் குளம் வரையுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகின்றன. இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். தீவுப்பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளாக மோட்டார் படகுப் போக்குவரத்து குடிநீர் வழங்கல் ஆகியவை உள்ளன. இந்தப் பிரச்சினைகள் அவர்களின் அடிப்படையான அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் பாதித்திருந்தன. இதைப் பற்றி மாவட்ட அமைச்சுக்குப் பல தூதுக்குழுக்கள் வந்தன. தங்கள் நியாயங்களை உணர்த்தின. இதன் பயனுக உரிய அதிகாரிகளுடன் மாவட்ட அமைச்சு தொடர்பு கொண்டு ஊர்காவற்றுறை தொடங்க நெடுந்தீவு உட்பட்ட பகுதிகளுக்கு "மணிமேகலை" ஆகிய படகுச் சேவையை ஏற்படுத்தி வைத்தது. இது போலவே குடி தண்ணீர்ப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு வழிவகைகள் ஆராயப்படுகின்றன. நிர்வாகத்தோடு மக்கள் கொண்ட நெருங்கிய தொடர்பினுலே இவற்றை எங்களால் சாதிக்க முடிந்தது. இது போலவே முழங்காவில் உருத்திரபுரம், உசன் ஆகிய பகுதிகளிலிருந்து வந்த மக்களின் கோரிக்கைகள் பல நல்ல முடிவுகளைத் தந்துள்ளன.

## மக்கள் காலடியில் நிர்வாகம்

நிர்வாகத்தை மக்களின் காலடிக்கு நாங்கள் கொண்டு சென்றிருக்கின்றோம். நடமாடும் செயலக முறையைப் பற்றி இன்று பரவலாகப் பாராட்டிப் பேசப்படுகிறது. அரசின் எல்லா அபிவிருத்தி வேலைகளிலும் மக்கள் தொடர்பு கொண்டு முன்னேற்றப் பாதையினை வகுப்பதற்கு இந்த முறை சிறந்த வழியினை அமைத்துக் கொடுத்திருக்கிறது. பிரயாணக் கஷ்டம் வேறுபல வசதியீனங்களால் அரசாங்க அதிகாரிகளை நேரில் சந்தித்து தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமலும் தங்கள் பகுதிகளுக்கான அபிவிருத்தி முயற்சிகளையிட்டு ஆலோசனை கூற வழியின்றியும் இருக்கிற சாதாரண கிராம மக்களின் நன்மைக்காகவே இந்த நடமாடும் செயலகமுறை ஆரம்பிக்கப்பட்டது அரச உயர் அதிகாரிகளோடு சென்று கிராம மக்களை அவர்கள் வாழ்கிற பகுதிகளிலேயே சந்திக்கிறது இந்த நடமாடும் செயலகம் இதில் அப்பகுதியின் பெரும்பாலான மக்களும் சமூக சேவை நிறுவனங்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பங்கு கொள்ளுகின்றன.

அவ்வப்பகுதி மக்களின் பிரச்சினைகள் என்னென்ன என்பதை அவ்வவ்விடத்திலே அவர்கள் வாயினுலேயே அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான மார்க்கங்களை கூடிய சீக்கிரமே ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. தங்கள் பகுதியின் பொருளாதார நிர்வாக அபிவிருத்திகள் குறித்து அவர்கள் ஒளிவு மறைவின்றிக் கூறுகிறார்கள். அவர்களின் பல கோரிக்கைகள் இதன் பலனாகப் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திலும் இடம் பெறமுடிகிறது. இந்த நடமாடும் செயலகம் நெடுந்தீவு நயினதீவு, பூநகரி, முழங்காவில், பளை, பருத்தித்துறை உசன் போன்ற பகுதிகளில் நடத்தப்பட்டபோது பொது மக்கள் பெரும் ஆர்வத்தோடு பங்கு கொண்டு தமது பகுதியின் பிரச்சினைகள் அபிவிருத்திகள் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்தனர். இந்த ஆலோசனைகளிலிருந்து மேலும் பல பயன்தருகிற செயல்களை மாவட்ட அமைச்சு மேற்கொள்ளமுடிந்தது. பளைப் பகுதியில் நடமாடும் செயலகம் நடைபெற்றபோது அப்பகுதி மக்கள் தங்களின் 68 பிரச்சினைகளை எங்கள் கவனத்திற்குச் சமர்ப்பித்தனர். அத்தோடு மேலும் 12 பிரச்சினைகளை அவ்விடத்திலேயே சமர்ப்பித்த மக்களுக்கு உரிய அதிகாரிகள் மூலம் விளக்கமும் தீர்வும் கொடுக்க முடிந்தது. அதைவிடப் பளைப்பகுதியின் ஏனைய கஷ்டப் பிரதேசங்களான முகாவில் மண்டலாய், இயக்கச்சி, போக்கறுப்பு. செம்பியன் பற்று ஆகிய பகுதிகளுக்கு நேரிலே சென்று மக்களின் பிரதான பிரச்னைகளை அறிந்து வர முடிந்தது. சுருக்கமாகச் சொல்லப்போனுல் மாவட்டத்தின் எல்லாப் பகுதி மக்களும் ஏதோ ஒரு விதத்தில் தங்கள் பிரதேச அபிவிருத்திகளில் தொடர்பு கொள்கிறார்களென்றே சொல்லலாம்.

## அபிவிருத்தியில் இளந்தலைமுறை

அபிவிருத்தித்துறையிலே இளைஞர்களும் யுவதிகளும் யாழ்ப்பாண மாவட்டத்திலே பெரும் பங்கினை வகிக்கிறார்கள் என்பதனை மிகுந்த பெருமையோடு இங்கே குறிப்பிடலாம், முழங்காவில் குளாய்க்கிணறுத்திட்டம் முழங்காவில் படித்த பெண்கள் பிரதேச அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றினை இங்கே சிறந்த உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். இளைஞர்களுக்கு நாங்கள் [illegible] வர்களே என்பதை மிருசுவில் படித்த பெண்கள் திட்டத்தினர் நிரூபித்துக் காட்டியுள்ளனர். உப உணவுப் பயிர்களைச் சிறந்த முறையிலே தமது காணிகளிலே பயிரிட்ட அவர்கள் இப்போது சுய வீடமைப்புத்திட்டத்தின் கீழே தமக்கென வீடுகளும் அமைக்கிறார்கள். இலங்கையிலுள்ள பெண்களின் விவசாயத்திட்டங்களுக்கு மிருசுவில் பெண்கள் சிறந்த முன் உதாரணம் காட்டி நிற்கிறார்கள். இதே வழியினைத்தான் முழங்காவில் பிரதேச அபிவிருத்தித்திட்டப் பெண்களும் பின்பற்றி எமது பகுதி அபிவிருத்திக்குத் தங்கள் பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர்.

## முழங்காவில் திட்டம் விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்களின் விவசாய ஆர்வமே முழங்காவில் குழாய்க் கிணற்றுத் திட்டமாக உருக்பெற்றிருக்கின்றது இம்மாவட்டத்தின் எல்லாத் தேர்தல் தொகுதி இளைஞர்களும் இத்திட்டத்தினுடைய பங்காளிகள். யாழ்ப்பாண மாவட்டப் பயிர்ச் செய்கையும், பொருளாதாரமும் இத்திட்ட இளைஞர்களால் மிகுந்த முன்னேற்றத்தை அடையும் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. இந்த ஆர்வத்தின் பயனுகவே மேலும் 200 ஏக்கர் பரப்பிற்கு இத்திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் எல்லா விதங்களிலும் அபிவிருத்தித்துறையில் பங்கு கொள்கிறார்கள் என்பதற்குச் சிறந்த உதாரணமாக ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்லலாம், விவசாயிகளுடைய பல பிரச்னைகள் நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாமலே இருந்திருக்கின்றன, மிளகாய் போன்ற உப உணவுப் பயிர்களின் விலையைச் சரியான முறையில் நிர்ணயிக்க வேண்டுமென விவசாயத்துக் குழுக்கள் வேண்டுகோள் விடுத்தன. இது இம்மாவட்டத்திற்கு மட்டுமன்றி, இலங்கையின் முன்னேற்றத்திற்கும் உதவக்கூடியதென்பது உணரப்பட்டு. அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நிவாரணமும் கிடைத்துள்ளது,

## தாராளமாக எமக்கு அரசு உதவுகிறது

இதுபோலப் பல உதரணங்கள் உள்ளன. பலதரப்பட்ட மக்களும் அபிவிருத்தி வேலைகளிலும் ஏனைய முன்னேற்றங்களிலும் பெரும் பங்கு கொள்வதற்கு ஆழமான காரணம் இருக்கிறது. இந்த அரசு இப்பகுதி மக்களின் அபிவிருத்திக்குத் தாராளமாக உதவுகிறது. நல்லெண்ண உறவுகளை வைத்துக்கொள்ள எல்லா வழிகளையும் திறந்துள்ளது. இதன் சரியான வெளிப்பாடே மக்களின் இத்த உற்சாகமான பங்களிப்பாகத் தோன்றியுள்ளது, மக்களின் உற்சாகத்தின் பயனுகவே 1979ல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழே ஒதுக்கப்பட்ட முழுப்பணமும் செலவிடப் பட்டுள்ளது என்று கூறலாம் அல்லவா?

## இன்றைய பலன்...

]7ம் பக்கத் தொடர்ச்சி]

விருச்சிகம்: பொதுத்துறைகளில் உங்கள் செல்வாக்கு பிரகாசிக்கும், பொது மக்களின் ஆதரவு வளர்வதற்கு இடமுண்டு, முன்னுள் ஆசிரியர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவார்.

தனுசு: பொறியியலாளர்களுக்குப் பொன்னுன தினம், பொருளும் புகழும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு, பொதுவாகத் தொழிலில் வெற்றியுண்டு.

மகரம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும், விருந்துபசாரங்களுமுண்டு, சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம், மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

கும்பம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும், மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும், உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும், மன அடக்கம் நன்று.

மீனம்: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும், இதயபாரம் வேதனைப்படுத்தும், திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

சோதிடக்கலாநிதி

க. வேலுப்பிள்ளை

## கலையாத கலைக்கு ஓர் கலையரசர்—

[இலங்கைப் பல்கலைகழகத்தால் 'நாடக வித்தகர்' பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட கலையரசு சொர்ணலிங்கத்தைப் பாராட்டி இலங்கை கலை இலக்கிய நண்பர் ஒன்றியம் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஓர் விழா எடுக்கிறது அதனையொட்டிய கவிதை இது.

மின்னி மறையும்
நட்சத்திரங்கள் நிறைந்த
கலைவானில்-
நிலையாக ஒளிவீசும்
கலைக்கதிரோன்,
ஈழத்து-
நாடகக்கலையின்
வரலாறு,
நடிப்புத்துறையின்
அடலேறு,
புதுமையில் பழமை
பேணும்
நம்மவர்கள் மத்தியில்,
பழமையில் புதுமை
ஜூட்டிய
கலைக்கோலம்,
தாம் ஏற்கும்
பாத்திரங்களால்
ஏற்றம் பெற்றோரேபலர்
ஆனல்-
ஏற்ற பாத்திரத்திற்கே
கௌரவமேற்படுத்தும்
ஆற்றலின் ஞானம்,
அமைதியில் ஞாலம்.

கலையாத கலையின்
அரசே...
நீங்கள் நடந்து வந்த
சுவடுகளைத்...
தொடர்ந்தவர்கள்
எத்தனையோ விளக்கு
களாய்
ஒளிவிடுகிறார்கள்...
உங்கள் ஆட்சிதான்
இன்னமும் நடக்கிறது-
-கலையுலகில்-
வெறும் ஆட்சியா?
இல்லவே இல்லை...
கலையின் மாட்சியும்தான்
ஒரு-
தசாப்தம்
உங்கள் கலைப்பாதங்களில்
சுருண்டு கிடக்கிறது...
வெறும்மனிதனுக்குத்
தான்
நரையும்
திரையும்...
நீங்களோ... கலைஞர்
கலையின் அரசர்
நரைவிழுந்தாலும்
திரைவிழாத...
காவியம்...
ஒரு—
சகாப்தம்
நாடக வித்தகரே...
நன்றே வாழ்க...
நலமே சூழ்க.

— 'தீபக்'

## பாடசாலைகள் கலைவிழா

[மட்டுவில்]

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தின், கைதடி நாவற்குழி உப-வட்டாரப்பாடசாலைகளின் இசை, நடன, நாடக கலைவிழா இம் மாதம் 24ந் திகதி மாலை 2-30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில், சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் தலைமையில் ஆரம்பமாகும்.

கைதடி கிராமட்சி மன்ற விசேடஆணையாளர் திரு. இ. இராமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பாடசாலை மாணவர்களின் சங்கீத, நடன, நாடகங்கள் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டியூட்டரி மாணவி கொலை வழக்கு:

# 2-ம் எதிரிக்குச் சார்பாக நாம்விசாரணை நடத்தவில்லை'

## உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(புலோலி)

"கமலம் கொலை சம்பந்தமான விசாரணைகளுக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. ஆனால் 2ம் எதிரிக்குச் சார்பாக இந்தக் கொலை விசாரணையை நாங்கள் நடத்தவில்லை.''

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் நீதவானின் கேள்விகளுக்குப் பதிலளித்துச் சாட்சியமளித்த காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. த இரத்தின சபாபதி குறிப்பிட்டார்.

கடந்த 1980 பெப்ரவரி 21ம் திகதிக்கும் 22ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பொலிகண்டியைச் சேர்ந்த டியூட்டறி மாணவி கமலத்தை வராத்துப்பளை ஆனை விழுந்தான் மானத்திற்கு அண்மையில் கொலை செய்தார்களெனவும் கொலை செய்யப்பட்ட கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்தார்களெனவும் கந்தசாமி இராஜகுமார் (இராஜன்) அல்லது வீரப்பன் அவரது நண்பரான பொன்சியஸ் பெர்ணண்டோ (ரெப்பி) அல்லது றெபின்சன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப்பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், 2ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராயிருந்தனர்.

நீதிமன்றத்திற்கு உதவியாக சட்டத்தரணி எம். சோமசுந்தரமும் பொலிசார்சாபில் சப் இன்ஸ்பெக்டர் ஜனுப் பீ. எம். டூல் கான்ஸ்டபிள் விவேகானந்தன் ஆகியோரும் பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவனருள்சுந்தரம் (காண்டீபன்) செல்விகளான உமா துரைசிங்கம், சந்திரா சச்சிதானந்தம், எல். சீ. பிலிப் ஆகியோரும் ஆஜராகி இருந்தவர்.

நீதவானின் கேள்விகளுக்குத் தொடர்ந்துபதிலளித்துச் சாட்சியமளித்த உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இரத்தினசபாபதி குறிப்பிட்டதாவது:-

நீதவான்: 1ம் எதிரி 3-4-80 ல் யாழ். சிறைச்சாலையில் வைத்து உங்களுக்கு வாக்குமூலமளித்தவுடனே யே அது ஒப்புதல் வாக்குமூலம் என்பது உங்களுக்குத் தெரியும் தானே? ஆம்.

நீதவான்: அந்த வாக்குமூலத்தில் 1ம் எதிரி கடைசியில் கூறியிருப்பது இந்த வாக்குமூலத்தை எடுப்பதற்கு எனக்கு பயமுறுத்தலோ ஊக்குவிப்போ செய்யப்படவில்லை என்று இச்சொற்பிரயோகங்கள் சட்டப் புத்தகத்தில் எங்கே வருகின்றன? குற்றவியல் சட்டத்தில் 111ம், 126ம் பிரிவுகளில்.

நீதவான்: இந்தச் சட்டச் சொற்பிரயோகங்களையும் 1ம் எதிரிக்குச் சொல்லிக் கொடுத்தது யார்? இவர் சொல்லும் போது நிசாம் பயமுறுத்தவோ ஊக்குவிக்கவோ பொருத்தமோ இல்லை என்று கேட்டார். அதற்கேற்பவே அவர் அப்படிச் சொன்னார்.

நீதவான்: நிசாம் அப்படிக் கேட்டிருந்தால் 1ம் எதிரி அப்படிச்சொல்லியிருந்தால் அவை ஏன் கேள்வி பதிலாகப் பதியப்படவில்லை? அந்த நேரத்தில் அது அவசியமெனக் கருதவில்லை.

நீத: அச்சொற்பிரயோகத்தைத் தொடர்ந்து நீங்கள் எழுதியுள்ளதில் க. இராசகுமார் 3-4-80 மேற் கூறிய கொலைக்காரக் குமாரின் வாய் முறைப்பாட்டை உண்மையாகவும் சரியாகவும் பதிந்துள்ளேன் என்று அப்படி நான் எழுதவில்லை.

நீத: 3-4-80-ல் நீங்கள் 2-ம் எதிரி வாக்கு மூலத்தை 1-ம் எதிரியின் சமூகத்தில் எடுக்க வில்லை என்று நிச்சயமாகக் கூறமுடியுமா? இரு வரையும் ஒன்றாக வைத்து விசாரித்தோம் ஆனால் வாய் முறைப்பாடு எழுதும் போது தாரத்தில் தான் வைத்திருந்தேன்.

நீதவான்: 2-ம் எதிரியின் வாக்குமூலத்தையும் அன்று எடுத்தீர்?-ஆம்.

நீதவான்: அது குற்றத்தை மறுக்கும் வாக்குமூலம்?-ஆம்,

நீதவான்: 2-ம் எதிரியின் வாக்குமூலத்தின் அடிக்குறிப்பாக எனக்கு எனது வாக்குமூலத்தை எடுக்க பயமுறுத்தலோ. ஊக்குவிப்போ பொருத்தமோ செய்யப்படவில்லை எனப்போட்டுள்ளீர்களா? ஆம்.

நீத: ஏன் அப்படியான கேள்விகள் இடம்பெற்றன?- ஏ. எஸ். பி. நிசாம் தான் கேட்டார். அதற்கு அவர் அப்படிச் சொன்னார்.

நீத: 1-ம் எதிரியிடம் அன்று எடுத்த வாக்குமூலம் அவர் தானாகவே முன்வந்து சுயாதீனமாகவும் தன்னிச்சையாகவும் கொடுத்த வாக்குமூலமா?-ஆம்.

நீத: நீங்கள் 1-ம் எதிரியிடம் 4-3-80 புளியம் பொக்கணையில் எடுத்ததாகக் கூறும் வாச்குமூலத்தில் அதி குறிப்பாக ஊக்குவித்தலோ, பொருத்தமோ, பயமுறுத்தலோ, கொடுக்கப்படவில்லை என்ற சொற்பிரயோகங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றனவா?-அப்படி எழுதப்படவில்லை.

நீத: 10-4-80 ல் [illegible] துறை வாடி வீட்டிற்கு முன்னால் வந்து 1-ம் எதிரியிடம் எடுத்த வாக்குமூலத்தில் இச்சொற்பிரயோகங்கள் பாவிக்கப்படுகின்றனவா?-இல்லை.

நீத. 1-ம் எதிரி கொடுத்த மூன்று வாக்குமூலங்களிலும் முன் வாக்குமூலத்திலும் வாக்குமூலத்திலும் இல்லாத சொற்பிரயோகங்கள் இடையில் 3-4-80ல்கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில்இடம் பெறவேண்டிய காரணம் என்ன?-நிசாம் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களை நான் பதிந்தேன்.

நீத: நீர் யாழ். அரச சட்டத்தரணி அரவிந்தனிடமும் வாக்குமூலங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளீர்?- ஆம், 1 செற் அத்தாட்சிப் புத்தகங்கள்

நீத: அவர் ஏன் அதைக் கேட்டார்?- 2-ம் எதிரி யாழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பிணைமனு சம்பந்தமாக சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்காக என்று கேட்டார்.

நீத: 2-ம் எதிரிக்கு எதிராக போதிய சாட்சியமில்லாதபடியால் பிணை கொடுக்கலாமென எழுதினீர்கள்?- எனக்குத் தெரியாது.

நீத: நீர் மன்று கேட்ட கேள்வியொன்றுக்கு மறுமொழி சொன்னபோது அந்த வழக்கிற்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று கூறியுள்ளீர்?- ஆம்.

நீத: பொது மக்களுடைய ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கவில்லையா? அல்லது நீங்கள் 2-ம் எதிரிக்குச் சார்பாக இந்த விசாரணையை நடத்தினீர்களா?- பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. ஆனால் 2-ம் எதிரிக்குச் சார்பாக நாங்கள் விசாரணையை மேற்கொள்ளவில்லை.

நீத: மேல்நீதிமன்றத்தில் 2-ம் எதிரியின் பிணைமனு எப்போது விசாரணை செய்யப்பட்டது?

9 - 5 - 80 என்று நான் நினைக்கிறேன்.

9 - 5 - 80 அன்று இந்த (பருத்தித்துறை) நீதிமன்றத்தில் கமலம் கொலைவழக்கின் துரட்சி அணைக்கப்பட்ட போது தகவல் புத்தகத்தின் அத்தாட்சிப்பிரதிகள் ஏன் அணைக்கப்படவில்லை?

நான் அணைக்கவில்லை எனவே எனக்குத் தெரியாது.

இன்று

## இந்து கலாச்சார நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திரு. மு. வைத்திலிங்கம் ஆங்கிலத்தில் எழுதிய 'சநாதன இந்துக் கலாச்சாரமும் இரு கற்பனைக் கதைகளும்' என்ற நூல் இன்று புதன் கிழமை மாலை கலாநிதி கா. இந்திரபாலா தலைமையில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறுகிறது. (அ)

# "கொள்ளையடிக்கும் 'வேலை'யில் சேரும்படி கேட்டார்"

## புங்குடுதீவு கொள்ளைவழக்கில் சாட்சியம்

(ஊர்காவற்றுறை)

"புங்குடுதீவு இறுப்பிட்டியிலுள்ள ஒரு பெரிய வீட்டில் இரவு கொள்ளையடிக்கப்போவதாகவும் அந்த வேலையில் என்னையும் சேருமாறும் இவ்வழக்கின் 4-ம் எதிரியான வெள்ளையன் பாலசிங்கம் என்னைக்கேட்டார். வேலைக்கு யார் வந்திருக்கிறார்கள் என்று நான் கேட்டபோது இரத்தினம் கோஷ்டி வந்திருப்பதாக 4-ம் எதிரி கூறினார். அப்போது 1-ம் எதிரியான செல்லன் இராசரத்தினம் வீட்டு விறுந்தையில் இருந்தார். நான் அவருடன் அந்தக் கொள்ளையடிக்கும் வேலையில் சேர மறுத்து விட்டேன்''

இவ்வாறு புங்குடுதீவு 95 ஆயிரம் ரூபா கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த லோப்பையா பொன்ராசா கூறினார்.

இவ்வழக்கில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 12-ம் திகதி இரவு புங்குடுதீவு இருபிட்டியில் உள்ள முத்துவேலு சிவக்கொழுந்து என்பவரின் வீட்டில் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியது. இரவுநேரத்தில் குறித்த வீட்டை உடைத்து உட்புகுந்து பயங்கர ஆயுதங்களைத் தாங்கி ரூபா 95 ஆயிரம் பெறுமதியான நகைகள், பணம், கைக்கடிகாரம், வெள்ளித் தம்ளர்கள் என்பனவற்றைக் கொள்ளையடித்ததாகவும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாகவும் நெடுந்தீவைச் சேர்ந்த செல்லன் இராசரத்தினம் அல்லது தகரை, செல்லன் சதாசிவம், தம்பிராசா சின்னத்தம்பி, இளையதம்பி கணேசமூர்த்தி, அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம், புங்குடுதீவை சேர்ந்த சின்னத்துரை செல்வராசா, வெள்ளையன் பாலசிங்கம், வெள்ளையன் குணசிங்கம் ஆகிய எண்மர் மீதும் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. கே. திலகன் முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் 8-ம் எதிரியான வெள்ளையன் குணசிங்கம் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளமையால் அவர்மீதுள்ள ஏனைய குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டு தண்டனை வழங்குவதை இவ்வழக்கு விசாரணை முடியும்வரை நீதிபதி ஒத்தி வைத்துள்ளார்: 5-ம் எதிரியான தம்பிராசா சின்னத்தம்பி இன்னமும் கைது செய்யப்படவில்லை. அவர் இல்லாமலேயே இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

லோப்பையா பொன்ராசா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"4-ம் எதிரிக்கு நான் வலை வாங்கிக் கொடுத்த வகையில் அவர் எனக்குத் தரவேண்டியிருந்த கொமிஷன் காசை வாங்குவதற்காகவே நான் புங்குடுதீவிற்குப் போனேன். அப்போது 1-ம் எதிரியும் அங்கிருந்தார். 1-ம் எதிரியையும், 4-ம் எதிரியையும் யாழ்ப்பாணம் விளக்க மறியல் சாலையிலேயே நான் முதன் முதலாகச் சந்தித்தேன். நான் வேலை செய்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் பொருட்கள் களவு போனது தொடர்பாகவே நான் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தேன்''

"நான் புங்குடுதீவிற்குச் சென்ற மறுதினம் 4-ம் எதிரி பாலசிங்கம் 3-ம் எதிரி செல்வராசாவுடன்கொய்யாத் தோட்டத்திலுள்ள எனது வீட்டிற்கு வந்தார். 3-ம் எதிரிக்குத் தெரியாமல் 4-ம் எதிரி எனக்கு ரூபா ஆயிரம் தந்தார். இதை 3-ம் எதிரிக்குச் சொல்லவேண்டாம் என்று சொன்னார். அப்போது 3-ம் எதிரி எனது வீட்டு விறுந்தையில் இருந்தார். நேற்றிரவு 'வேலை' முடிந்து விட்டது என 4-ம் எதிரி மேலும் கூறினார். பின்னர் 3-ம் எதிரி [illegible] 300 [illegible] வாங்கி எனக்குத் தந்தார்.''

(8-ம் பக்கம் பார்க்க)


National
நெஷனல்
மல்றி குக்கர்
[illegible]ங்கள் எரிபொருள் செலவைக் குறையுங்கள்.
சோறு, கறிவகைகள், இரசம் முதலான உணவை முன்னிலும் பார்க்க வெகு விரைவாக சமைப்பதற்கு மல்றி குக்கர் பாவியுங்கள்.
சமைக்கும் உணவின் சுவை மாறுதிருப்பதற்கு ஏற்றவாறு உருவமைக்கப்பட்டது
இதனை இயக்குவதும் சுலபம்- அதாவது "புஷ்பட்டன்" முறை.



கிடைக்குமிடம்:
நெஷனல் காட்சியறை
84, செட்டின் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 36259, 27970 மற்றும்
235, காலி றோட், கொழும்பு 4.
பிரதிநிதிகள்:
யுனி வோக்கர்ஸ் லிமிட்டெட்
Mal Ads 662
விலை ரூ. 1090/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈராக் - ஈரான் விமானப் போர் உக்கிரம் தெஹ்ரானிலும் பாக்தாத்திலும் இருட்டடிப்பு!

## 11 ஈராக் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன; 200 பேர் பலி!! இளைஞர்கள் யுத்தத்துக்கு அழைப்பு

பக்தாத், செப். 23

ஈராக்--ஈரான் யுத்த விமானங்களின் தாக்குதல் உக்கிரமடைந்ததை அடுத்து தெஹ்ரானிலும் பாக்தாத்திலும் நேற்று இருட்டடிப்பு அனுசரிக்கப்பட்டது.

விமானத்தாக்குதலிருந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளவேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இரு நாட்டு அரசாங்கங்களும் பொதுமக்களைக் கேட்டுள்ளன.

### ஈராக் விமானங்கள் சேதம்

இதேசமயம் இரு நட்டு விமானங்களும் விமானத்தளங்களையே தீவிரமாகத்தாக்கி வருகின்றன என்றும் ஈராக் விமான நிலையத்தை தாக்கிய ஈரானிய விமானங்கள் 11 ஈராக்விமானங்களை முற்றுகச் சேதப்படுத்தியுள்ளன என்றும் இம் மோதலில் 4 ஈரானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்றும் ஈரானிய ஜனாதிபதி ஜனுப் பாணிசதார் தெரிவித்துள்ளார்.

### 200 சிப்பாய்கள் பலி!

இதுவரை 200 ஈராக் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும் அவர் வானொலிமூலம் தெரிவித்தார்.

### முழுப்போராக மாறிவிட்டது

இதே வேளையில், இருநாட்டு பூசல்கள், முழுப்போராக மாறிவிட்டது என்றும் இதைத்தடுக்கும் இராணுவ நடவடிக்கைகளில் ஈராக் ஈடுபட்டுள்ளது என்றும் ஈராக்புரட்சிச் சபை அறிவித்துள்ளது.

### போராட இளைஞர்களுக்கு அழைப்பு

யுத்தநிலைமை மோசமடைவதை அடுத்து 1957ம் ஆண்டு பிறந்த ஈராக் இளைஞர்கள் அனைவரையும் ஈரானுக்கு எதிராகப் போரிடவருமாறு புரட்சிச்சபை அழைப்பு விடுத்துள்ளது.

இராணுவ, பொலிஸ், பொதுமக்கள் பாதுகாப்பு, சங்கத்திணைக்கள தொண்டர் புரட்சிபடைகளை உடனடியாக சேவைக்கு அழைத்துள்ளதோடு இளைஞர்களையும் இம் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் இத்தொண்டர்படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளுமாறும் பணித்துள்ளது.

விமானச் சண்டை உக்கிரமடைந்துள்ளவேளையில், ஈராக்—ஈரான் எல்லையில் பீரங்கிச் சண்டையும் ஆரம்பமாகியுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

வளைகுடா பிரதேசத்தில் ஸ்திரநிலை பேண

## ஈரான் அயல் நாடுகளுடன் ஒற்றுமையாக இருக்கவேண்டும்

### அமெரிக்கா கருத்து

நியூயோர்க் செப். 23

வளைகுடாப் பிரதேசத்தில் பலம் வாய்ந்த ஐக்கிய சுதந்திர ஈரான் ஒன்று இருந்தால் தான் அப்பிரதேசத்தில் ஸ்திர நிலை ஏற்படும்.

இவ்வாறுஅமெரிக்கராஜாங்க அமைச்சர் திரு. எட்மண்ட் மஸ்கி ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில் தெரிவித்தார்.

வளைகுடா பிரதேசத்தின் ஸ்திர நிலையைப் பேணும் பொருட்டு ஈரான் அயல்நாடுகளுடன் ஒற்றுமையாகஇருக்க வேண்டும் என்றும் திரு.மஸ்கி கூறினர். (இ)

---

## எண்ணை உற்பத்தி 10 வீதம் குறைப்பு

வியன்னு செப். 23

எண்ணை உற்பத்தியை 10 வீதம் குறைப்பதென ஆறு எண்ணை உற்பத்தி செய்யும் நாடுகள் முகுவு செய்துள்ளன,

இந்தோனேசியா, நைஜீரியா லிபியா, அல் ஜீரியா, வெனிசூலா, ஈரான், ஆகிய ஆறு நாடுகளையும் சேர்ந்த அமைச்சர்கள் வியன்னுவில் கூடி முடிவு செய்துள்ளனர்.

இம்முடிவுக்கமைய எண்ணை உற்பத்தி நாளாந்தம் 15 லட்சம் பீப்பாக்களால் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

## இந்தியாவில் தேசிய பாதுகாப்பு அவசரச்சட்டம் அமுல்

### பந்தோபஸ்துக்கு ஊறுவிளைவிப்போரை காவலில் வைக்க அதிகாரம்

புதுடில்லி. செப். 23

தேசிய பந்தோபஸ்து அவசர சட்டம் ஒன்றை இந்திய ஜனுபதி திரு.நீலன்சஞ்சீவ ரெட்டி பிறப்பித்துள்ளார். நாட்டின் பாதுகாப்புக்கு அல்லது பந்தோபஸ்துக்கு ஊறுவிளைவிக்கும் எவரையும் கைதுசெய்து காவலில் வைப்பதற்கு இச்சட்டம் மத்திய மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கிறது.

பொதுஒழுங்கு சமுதாய வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் விநியோகம் ஆகியவற்றைப் பராமரிப்பதற்காக அவசியம் ஏற்படும் பட்சத்தில் எவரையும் இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யலாம் என்றும் 12 மாதங்கள் வரை காவலில் வைத்திருக்கலாம் என்றும் ஜனதிபதி உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் இச்சட்டத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இச்சட்டத்தைத் தவருன வழியில் பயன்படுத்துவதைத் தடுக்கவும், இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்படுபவர்களுக்கு இச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்படுபவர்களுக்கு கைது செய்யப்பட்ட நாளிலிருந்து 5 நாட்களுக்குள் விசேட சந்தர்ப்பங்களில் 10 நாட்களுக்குள் அவர் கைதுசெய்யப்பட்டதற்கான காரணங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

இனக்கலவரம், கள்ளச் சந்தை, ஊழல், மோசடி, போன்ற தேசவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு காவலின் வைக்கப்படுவர்.

காவலில் வைக்கப்படுவோர் மேன்முறையீடு செய்யவும் இச்சட்டத்தில் வசதிஅளிக்கப்பட்டுள்ளது. (இ)

---

## ரூ 15 லட்சம் செலவில் தங்கத் தேர்!

மதுரை, செப். 23

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில்15லட்சம்ரூபா செலவில் தங்கத்தேர் ஒன்று அமைக்கப்படஉள்ளது.

இதற்கான அனுமதியை மாநில அரசு வழங்கியுள்ளது. (இ)

---





பெரு லாபம் பெற
கிரமக்சோன்
நெல் வயலில்
முறையைப் பாவியுங்கள்

**கிரமக்சோன் முறை இதோ!**

- பயிரிடும் மூன் வயலில் நீர் வடிய விட்டுக் களைகளை வளரச் செய்யுங்கள்.
- சிவப்பு 'பொலிஜெட்' குழாய் முனை கொண்ட தெளி கருவி மூலம் 1 கலன் நீரில் 1 அவுன்ஸ் கிரமக்சோன் கலந்து தெளியுங்கள்.
- 1 ஏக்கருக்குத் தெளிக்கையில் 4 அவுன்ஸ் தெளி கலவையை மீதம் வையுங்கள்.
- மறுநாள், தவற விட்ட இடங்களில் இதைத் தெளியுங்கள்.
- 3 முழு நாட்கள் கழிந்ததும் களைகள் முற்றுகரும்படி வயலில் நீர் பாய்ச்சுங்கள்.
- 5 நாட்களின் பின் மீண்டும் நீர் வடிய விட்டு உழுங்கள்.
- பரம்படித்து, உலர் பசளை தெளித்த பின் விதையுங்கள்; அல்லது நாற்று நடுங்கள்.

% விளைச்சல் ஏக்கருக்கு 12 புசல் வீதம் அதிகரிக்கும்.

**கிரமக்சோன் முறை தரும் பயன்கள் இதோ!**

- ஓர் உழவுச் செலவு மிச்சப்படும்.
- மண் உழுவதற்கு இலேசாக மெதுமைப்படும்.
- பத்து நாளில் பயிரிடும் வேலைகளை முடித்து விடலாம்.
- மற்றக் களைகளுடன் சல்வீனியாவும் கட்டுப்படும்.
- மண் மெதுமையும் பசுமையும் அடைவதால் பயிர்கள் மேலும் செழித்து வளரும்.
- அழுகி உக்கும் களைகளும் பயிர்களுக்கு உரப் பசளையாகி விடும்.
- நெல்லோடு புதிதாக வளரும் களைகளும் பெருமளவு கட்டுப்படும்.
- நீர் மிச்சப்படும்; நீர்ப் பாசன நேரமும் குறையும்.

CIC

**கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட் (கொழும்பு)**

ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, த. பெ. எண் 352, கொழும்பு 1. தொலைபேசி: 28421 - 9

நிகர அளவு: 450 மி. லீ. சில்லறை விலை: ரூ. 37.50


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

தினசரி 4 காட்சிகள்

**ஸ்ரீதர்** யாழ்ப்பாணம்

சிவாஜி, மாலினி பொன்சேகா, ஸ்ரீதேவி, ஜெய்சித்ரா

**பைலட் பிரேம்நாத்**

விரைவில்

எம். ஜி. ஆர். - லதா நடித்த

**மீனவ நண்பன்**

**ராணி** - யாழ்ப்பாணம்

காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45

கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா

**சட்டம் என் கையில்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)

தினசரி 4 காட்சிகள்

**THE DEEP**

**லிடோ** (யாழ்நகர்)

தினசரி 10-30, 2-15, 4-45 7-15, 9-45

**Foul Play**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)

தினசரி 10-30, 4-45, 7-00, & 9-45

SEAN CONNERY, RICHARD BURTON in

**SHALAKO**

எதிர்பாருங்கள்

**ஒரேவானம் ஒரேபூமி**

**WINDSOR** (JAFFNA)

IT'S EVIL ... IT'S HORRIFIC

IT'S CONCEIVED BY THE DEVIL

Daily 4 Shows

Daily at 10-30 a. m. 2-00, 4-30, & 7-00 p. m only

JOAN COLLINS — EILEEN ATKINS

RALPH BATES — DONALD PLESANCE

in

**"I DONT WANT TO BE BORN"**

Color—Adults only

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642

10-30, 2-30, 6-30, 9-45

75—வது வெற்றித் திருநாளை நோக்கி

**நீயா?**

கமல், லதா, ஸ்ரீபிரியா, மஞ்சுளா, விஜயகுமார், நம்பியார், சுருளி

இசை: சங்கர் — கணேஷ்

எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராஜா - யாழ்ப்பாணம்**

தினசரி 4 காட்சிகள்

கலைஞர் மு. கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் அருமையான சண்டைக் காட்சி.

அருமையான பாடல்களுடன் குழுகுழு கலரில் உருவான ஒப்பற்ற திரைக் காவியம்.



ஜெய்சங்கர், ஜெயசித்திரா, அசோகன், எம். ஆர். ராதா, எஸ். வி. சுப்பையா நடிக்கும்

**வண்டிக்காரன் மகன்**

(ஈஸ்மன் கலர்)


# அபிவிருத்தி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சிக்கே மாறுதல்வேண்டும்.

மகாதேவாப் பாலத்தை உடனடியாக ஆரம்பிக்கும் வேலைகளைத் தூண்டுதல் நமது பாராளுமன்ற அங்கத்தவர்களின் முதற் கடமையாகும்.

நாடு நகர நிர்மாணத் திட்டமிடல் அமைச்சின் உயர் அதிகாரிகளினாலும் வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையுடனும் தயாரிக்கப்படும் மாதிரி வரைபடத்திற்கேற்ப குறுகிய கால எல்லைக்குள் வெளிநாட்டு உதவியுடன் கட்டி முடிக்க வேண்டிய நகரமே கிளிநொச்சியாகும்.

மாவட்ட சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் கட்சிகள் அரசியல் நோக்கோடு பார்க்காது அபிவிருத்தியை மையமாகக் கொண்டு நிபுணர்களையும் அறிஞர்களையுமே தமது வேட்பாளர்களாக மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலுக்கு நிறுத்தவேண்டும்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் தமது கட்சியில் இடம் கொடுத்து அரசியலுக்குப் புதிய இரத்தம் பாய்ச்சியதைத் தமிழர் கட்சிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாவட்டசபை தவழும் குழந்தை. எதிர்காலத்தைச் சரியாகக் கணிக்கமுடியாது- தமிழ்ப் பிரதேசங்கள் அபிவிருத்தியடையுமாயின் மாவட்ட சபைகள் எமக்குக் கிடைத்த பெருவெற்றி என்றே கூற முடியும்.


**க. சபாரத்தினம்,**

உப காரியதரிசி,

கிராமமுன்னேற்றச் சங்கம்,

சித்தன்கேணி.



**ஹரன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா

நடித்த

**ராமன்தேடியசீதை**

**வெஸ்லி** (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

**கைகொடுத்த தெய்வம்**


# இலங்கையில் இராம...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் கூறியபடி இதற்குமுன் மட்டக்களப்பில் ஒரு சைவ ஆங்கில பாடசாலையுமிருக்கவில்லை. ஆங்கிலக் கல்வியைப் பெறவிரும்புவோர் வெஸ்லியன் மிஷன் பாடசாலைகளுக்கோ, அல்லது கத்தோலிக்க பாடசாலைகளுக்கோ, போகவேண்டியிருந்தது. சுவாமி விபுலாநந்தரும் தமது ஆங்கிலக் கல்வியை கல்முனை வெஸ்லியன் மிஷன் பாடசாலையிலும் சென்ற் மைக்கேல் கல்லூரியிலுமே பெற்றூர்கள்.

சுவாமிகள் 1933 ஆம் ஆண்டில் சிவானந்த வித்தியாலயத்துக்கு அதிபரானூர்கள். 1934, 1935 ஆம் ஆண்டுகளில் அவர்களுக்குக் கீழ்ப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதனுல் அவர்கள் அங்கு சைவ சமயத்துக்கும் கல்விக்கும் செய்த தொண்டுகளை நான் நேர்முகமாக அறியக்கூடியதாயிருந்தது. நாவலர் அவர்கள் வடமாகாணத்துக்குச் செய்த தொண்டு போன்றது. விபுலாநந்தர் அவர்கள் மட்டக்களப்புக்குச் செய்த தொண்டெனச் சுருங்கக்கூறலாம்.

சிவானந்த வித்தியாலயம் இருக்குமிடம் ஒரு காலத்தில் இடுகாடாயிருந்தது. மேலும் அவ்விடம் ஒரே மணற்பரப்பாயிருந்தது. சுவாமிகள் யாழ்ப்பாணத்திலிருந்து ஒட்டுமாங்கன்றுகளைக் கொண்டு போய் நாட்டி, ஒருசில வருடங்களில் அவ்விடத்தைப் பச்சைப்பசேலென்ற சீவபூமியாக்கிவிட்டார்கள். கல்வித்துறையிலும் சிவானந்த வித்தியாலயம் சிலவாண்டுகளில் மட்டக்களப்பில் முதலிடத்தைப் பெற்றுவிட்டது. ஜே. எஸ். சி., எஸ். எஸ். சி. போன்ற பரீட்சைகளில் நூற்றுக்கு நூறு பேறுகள் அடுத்து அடுத்துப் பெற்றது. அதனுல் மக்களிடத்து ஒரு புது உணர்ச்சி யேற்பட்டது.

சுவாமிகள் பெண்களுக்கென மட்டக்களப்பு ஆனைப்பந்தியில் ஒரு ஆங்கில பாடசாலையையும், தமது சொந்தக் கிராமமான காரைதீவில் ஒரு தமிழ்ப்பாடசாலையையும் ஆரம்பித்தார்கள். யாழ்ப்பாணத்தில் கௌச்குவிலிலும், திருக்கோணமலையில் தம்பலகாமத்திலும் மட்டக்களப்பின் பல்வேறு இடங்களிலும் புதிய பாடசாலைகளை ஆரம்பித்தார்கள்.

இராமகிருஷ்ண சங்கத்தின் கல்வி சம்பந்தமான இன்னொரு பணி மாணவரில்லங்களை நடாத்துவதாகும். முதல்மாணவரில்லம் யாழ்ப்பாணத்தில் வைத்தீஸ்வரவித்தியாலயத்தோடு சேர்த்து பின்னர் கலாநிலையம் நடாத்தப்பட்ட மடத்தில் 1926 ஆம் ஆண்டில்ஆரம்பிக்கப்பட்டது. இம்மாணவரில்லம் பின்னர் சிவானந்தவித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டது. இம்மாணவரில்லத்துக்கு இப்பொழுது ஒரு புதிய கட்டிடம் அமைக்கப்பெற்று புதுப் பொலிவோடு விளங்குகிறது.

பெண்களுக்கென இரு மாணவரில்லங்கள் மட்டக்களப்பு ஆனைப்பந்தியிலும் காரைதீவிலும் நிறுவப்பட்டன. இவ்வில்லங்கள் எத்தனையோ அனுதைப் பிள்ளைகளுக்கு வாழ்வளித்து வருகின்றன. அனுதைகள் என்ற உணர்ச்சி பிள்ளைகளுக்கு ஏற்படாத முறையில் அவர்கள் வளர்க்கப்படுகிறூர்கள். அங்கிருந்து வெளியேறியவர்கள் பலர் உன்னத பதவியிலிருக்கிறூர்கள்.

1961 ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது வைத்தீஸ்வர வித்தியாலயமும், திருக்கோணமலை இந்துக்கல்லூரியும் சிவானந்த வித்தியாலயமும் இலங்கையிலுள்ள சிறந்த கல்லூரிகளோடு சரிநிகர் சமானமாக விளங்கின.

இராமகிருஷ்ண சங்கப்பாடசாலைகளைச் சுவாமி விபுலாநந்தர் மறைவுக்குப் பின் அரசாங்கம் அவற்றைப் பொறுப்பேற்கும் வரை சுவாமி நடராஜானந்தா சிறப்பாக நடத்திவந்தார்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் மாணவரில்லங்கள் தனித்தியங்கி வருகின்றன. அனுதை இல்லங்களை நடாத்துவோருக்கு இவையொரு முன் மாதிரியாக விளங்குகின்றன.

இராமகிருஷ்ண சங்கம் நடாத்திவரும் இன்னொரு கல்விப் பணியை எடுத்துக் கூறி இக் கட்டுரையை முடிப்பாம். 1952 ஆம் ஆண்டு தொடக்கம் இராமகிருஷ்ண சங்கம் வெள்ளவத்தையில் ஞாயிற்றுக்கிழமைகளில் சமய வகுப்புக்களை நடாத்திவருகிறது. இவ்வகுப்புக்களில் பாலர் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். சி. வகுப்புவரைக்கும் பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் படித்துவருகிறூர்கள். இவ்வகுப்புக்களில் 500 க்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்கிறூர்கள். இருபதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தொண்டாக இங்கு படிப்பித்துவருகிறூர்கள் பிள்ளைகளுக்குச் சமய பாடத்தைப் படிப்பிப்பதோடு, பக்திப் பாடல்களை இசையோடு பாடுவதற்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆண்டு தோறும் இப்பிள்ளைகளுக்குப் பரீட்சை வைத்துப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.


**நாகம்ஸ்** (சுன்னுகம்)

தினசரி 6-30, 930

சனி, ஞாயிறு 2-15

எம் ஜி ஆர் - சரோஜாதேவி

**பணக்காரக் குடும்பம்**

(பகிய பிரதி)


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 8- ம் திகதி

(புதன்கிழமை)

(24 - 9 - 1980)

மேடம்: போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள், எதிலும் நிறைவு தென்படும், முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும், குடும்பத்திலும் அன்பு தவழும்.

இடபம்: உடல்நலம் சிறிது பாதிக்கப்படும், வைத்திய வழிகளில் பணம் செலவாகும், சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும், ஓய்வு விரும்பத்தக்கது.

மிதுனம்: நீண்டநாள் பிரச்சினைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும், தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு, சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம், முன்னேற்றமான தினம்.

கடகம்: இதயத்தின் ஏக்கம் இன்று கனியும், தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும், பரோபகார சிந்தை மேவிடும், நண்பர் ஒருவருக்குக் கைகொடுத்து உதவுவீர்கள், செல்வாக்குப் பெருகும்.

சிங்கம்: கருடப்பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள், சிலருக்கு அந்நிய வாசமும் அகால போசனமும் உண்டு.

கன்னி: உள்ளத்தில் உவகைக் கூத்து, உறவினர்கள் வருகை, வாழ்க்கை நிரம்பியதாக இருக்கும், மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும், எதிலும் தூய்மையைக் காண விரும்புவீர்கள்.

துலாம்: அதிக நம்பிச்கை ஆபத்தைத் தேடித்தரலாம், தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும், மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள், நிதானம் வெற்றியைத் தரும்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

7 ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞானம்
வினு–விடை

தாவர விலங்குகளைப் பாகு படுத்தும் இருகிளைத் திறவு கோள் முறை உட்பட விளக்கக் குறிப்புகளும் உள்ளன.
ஆலோசனை செ. வேலாயுதபிள்ளை B. A; Sc. Trd.
விலை 3–25

காந்தளகம்
213 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

ஈழநாடு 30 சதம்
EELANAADU

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 -9 -24
PERIODICALS DIVISION
LIBRARY

## பட்டம்மாள் இன்று யாழ். வருகிருர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இசை விருந்தளிக்கும்பொருட்டு கர்நாடக இசைமேதை திருமதி டி. கே. பட்டம்மாள் இன்று யாழ்ப்பாணம் வருகிருர்.

இவருடன் கூட திருமதி நிர்மலா சிவகுமார், திரு. எம். எல். அனந்தராமன், திரு. ஐ. சிவகுமார் ஆகிய இசைக் கலைஞர்களும் வருகை தருகிருர்கள். இவரின் இசை நிகழ்ச்சி நாளை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. (வெ)

## கலையரசுக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

நாடக வித்தகர் கலையரசு சொர்ணலிங்கத்திற்கு இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பாராட்டுவிழா நடைபெறும்.

இவ்விழாவில் 'கலையரசின் நாடகப் பணி' என்ற தலைப்பில், நாடகத் தயாரிப்பாளரும், ஆசிரியருமான திரு. குழந்தைவேலு அறிமுக உரை நிகழ்த்துவார். இலங்கைக் கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவிற்கு ஒன்றியத்தின் தலைவரும், பல்கலைக்கழக விரிவுரையாளருமான திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமைவகிப்பார்.

### மாணவி கமலம் கொலை வழக்கு

# "பொலிஸாருக்கு எதிரான கைலஞ்சப் புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது!"

## குறுக்கு விசாரணையில் ஏ. எஸ். பி.



(மேலதிக நிருபர் திருச்செல்வம்)

"கமலம் கொலை வழக்கு சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கைலஞ்சப் புகார்கள் செய்யப்பட்டது பற்றி எனக்குத் தெரியாது. ஆனுல் பருத்தித்துறை நீதவானிடம் இது பற்றி முறையீடு செய்யப்பட்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன்."

இவ்வாறு பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த யாழ். குற்றவியல் பகுதி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜனுப். முகமட் நிசாம் குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதாவன் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயவேும் ஆஜராகிஇருந்தனர் நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம், சோமசுந்தரமும் பொலீஸ் சார்பில் சப். இன்ஸ்பெக்டர் ஜனுப். பீ. எம். டூல் கான்ஸ்டபிள் விவேகானந்தன் ஆகியோரும் பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம் எஸ். சிவனருள்சுந்தரம் (காண்டீபன்) செல்விகளான உமா. துரைசிங்கம் சந்திரா சச்சிதானந்தம் எல். சீ. பிலிப் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஜனுப். நிசாம் குறிப்பிட்டதாவது:

"கடந்த பெப்ரவரி மாதம் 22ம் திகதி சாங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வெளியே சென்றிருந்ததால் நான் இப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்தேன். இங்கு நடைபெற்ற களவு ஒன்று சம்பந்தமாக 22-2-80 அன்று நான் பருத்தித்துறைப் பொலிசிற்கு வந்திருந்தேன். அப்போது இறந்த கமலத்தின் தாயார் பொலிஸ் நிலையத்தில் இருந்ததைக் கண்டேன். அவர் கமலம் காணுமல் போனது பற்றிப் புகார் செய்து கொண்டிருந்தார். சற்று நேரத்தில் பருத்தித்துறை ஆனைவிழுந்தான் மயானத்திற்கண்மையில் இளம்பெண் ஒருவரின் சடலம் கிடப்பதாகத் தகவல் கிடைத்தது. பின்னர் அங்கு சடலத்தின் அருகில் கிடந்த சான்றுப் பொருட்கள் கமலத்தினுடையதென அறிவிக்கப்பட்டபின்னர் நான் பருத்தித்துறைப் பொலிசாருக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டேன்.

நீத:- 1-4-80 அன்று 1ம், 2ம் எதிரிகள் இந்த நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்? - ஆம்.

நீத:- அன்று நீரும் சப். இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியும் யாழ் சிறைச்சாலைக்கு இக்கொலை சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணை செய்வதற்காக விண்ணப்பம் செய்தீர்கள்? - அப்படி நீதிமன்றத்தில் அனுமதி பெறுமாறு சப். இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியைப் பணித்திருந்தேன்.

நீத: அந்த உத்தரவுடன் 3-4-80ல் நீரும் சப். இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியும் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று 1ம் எதிரியை மீண்டும் சந்தித்தீர்கள்? - ஆம்.

நீத:- அப்போது நீங்கள் 1ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்கு மூலமெடுத்தீர்களா? - வாக்கு மூலமெடுத்தோம். அது ஒப்புதல் வாக்குமூலமென எழுதப்படவில்லை.

நீத: அந்த வாக்குமூலத்தின் கடைசி வசனமாக 1ம் எதிரி "இந்த வாக்குமூலத்தை எடுப்பதற்கு எனக்குப் பயமுறுத்தலோ, ஊக்குவித்தலோ, பொருத்தமோ செய்யப்படவில்லை" என்று கூறியதில் உள்ள இந்தச் சொற்பிரயோகங்கள் சட்டப் புத்தகத்தில் எங்கே குறிக்கப்பட்டுள்ளது.?-குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 126ம் 111ம் பிரிவுகளில் வருகின்றன.

நீத: இந்தச் சொற்பிரயோகங்களை 1ம் எதிரி வாக்குமூலத்தில் சொல்லும்படி சொல்லிக்கொடுத்தது யார்?- இவ்வாக்குமூலத்தில் சப்-இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியின் கேள்விகளுக்கு மறுமொழியாக இருக்கலாம்,

நீத- நீர் இதை உபயோகிக்கும்படி சொல்லிக்கொடுக்கவில்லையா?-நான் வாக்குமூலம் எடுக்கும் இடத்தில் இருந்தேன். ஆனுல் வாக்குமூலத்தை நான் பதியவில்லை. இச்சொற்பிரயோகங்களை உபயோகிக்கும்படி இரத்தினசபாபதியிடமும் கூறவில்லை.

நீத: 1ம் எதிரி வாக்குமூலம் கொடுத்தவுடன் இந்தச் சொற்பிரயோகங்கள் பாவிக்கப்பட்டன என்பது உமக்குத் தெரியும்?- 1ம் எதிரி இச் சொற்பிரயோகங்களைப் பாவித்துள்ளாரென்பது இரத்தினசபாபதி வாக்குமூலத்தைப் பதிந்தவுடனேயே எனக்குத் தெரியும்.

நீத: நீர் இரத்தினசபாபதிக்கு ஒன்றும் கூறவில்லை என்று நிச்சயமாகக் கூறமுடியுமா?-நான் அன்று இரத்தினசபாபதி பதிந்த வாக்குமூலத்தின் எந்தப் பகுதியிலும் எவ்வாறு பதியவேண்டுமெனக் கூறவில்லை என்பதை நிச்சயமாகக் கூறுகிறேன்.

நீத: சப்-இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி சற்று முன்னர் சாட்சியமளிக்கையில் இது ஏ. எஸ். பி. நிசாமின் சொற்படிதான் இச்சொற்பிரயோகங்கள் 1ம் எதிரியின் வாக்குமூலத்தில் பதியப்பட்டன என்று கூறியுள்ளார். இதில் நீர் சொல்வது உண்மையா? சப்-இன்ஸ்பெக்டர் இரத்தின சபாபதி சொல்வது உண்மையா?-நான் சொல்வது உண்மை.

## கொள்ளை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"புங்குடுதீவில் கொள்ளையடிக்கப்பட்டது பற்றி நான் சில நாட்களின் பின் பத்திரிகைகளில்பார்த்தேன். சில தினங்களின்பின் 4-ம் எதிரி என்னிடம் வந்து 700 ரூபா வாக்கினர். கொள்ளைபற்றி அறிந்திருந்தமையால் இரவு எனது வீட்டில் படுக்க வேண்டாம் என்றும் மாதா கோயிலில் சென்று படுக்கும்படியும் கூறி அவரை அனுப்பினேன். மறுநாள் காலையில் அவரைச் சந்தித்தேன். கொமிஷன் காசு தவிர மேலும் நான் அவருக்குக் காசு கொடுக்கவேண்டிய பணத்தைச் செலவழித்து விட்டதால் நண்பர் ஒருவரிடம் பணம் வாங்குவதற்காக 4-ம் எதிரியை யாழ் புகையிரத நிலையத்தில் நிற்கும்படி கூறிவிட்டுச் சென்றேன். நான் திரும்பி வந்த பொழுது ஆட்கள் அவரைப்பிடித்துக் கொண்டிருந்தார்கள். நான் அங்கிருந்து மெல்ல நழுவிச் சென்று விட்டேன். அன்றிரவு பொலிசார் எனது வீட்டில் வைத்து என்னைக் கைது செய்தார்கள். வாக்குமூலம் பதியப்பட்டபின் அடுத்தநாள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டேன்"

"நான் சில வருடங்களாக வேலை எதுவுமற்று இருக்கிறேன். எனது மனைவி குவைத் நாட்டில் வேலை செய்கிருர். எங்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக கடிதத் தொடர்பு எதுவுமில்லை"

மேல்விசாரணை அடுத்த மாதம் 4-ம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கே. வி. நவரத்தினம் சாட்சியை நெறிப்படுத்திஞர். 1-ம், 3-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும், 6-ம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி பி. கைலாசநாதனும் ஏனைய எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி ஆர். சபேசனும் ஆஜராயிருந்தனர்.

## மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடைக்கால விசாரணை அறிக்கையை பரீட்சை ஆணையாளர் திரு. குணபால விக்கிரமசிங்க கல்வி அமைச்சரிடம் சமர்ப்பித்தார்.

இதேவேளையில், இரகசியப் பொலிசார் இதுதொடர்பான முழுவிசாரணை அறிக்கையை இன்னும் 4 நாட்களில் அரசிடம் சமர்ப்பிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

### யாழ். மாவட்ட

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பொன்விழா

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பொன் விழா நிகழ்ச்சிகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இப் பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து பொருட்டு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத் தலைவர் திரு. மலறி விஜயசேகரா, கொமாண்டர் டாக்டர் ஒஸ்வின் பெர்ஞண்டோ மற்றும் பிரமுகர்களைகொண்ட குழுவினர் யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இக் குழுவினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி யாழ். மாநகர சபை முதல்வர் திரு. இ. விசுவநாதன் ஆகியோரைச் சந்தித்து உரையாடுவார்கள். வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரக்கு விஜயம் செய்து அங்குள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்த மபணவிகளின் அணிவகுப்பைப் பார்வையிடுவார்கள். அதைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தைச் சேர்ந்த மாணவிகளின் முதலுதவிச் செய்முறைப் பயிற்சியை பார்வையிடுவதுடன் நற்சான்றிதழ்களையும் கையளிப்பார்கள். அதனைத் தொடர்ந்து இளவாலை கொல்லன் கலட்டி ஆகிய இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவார்கள். பிற்பகல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் கருத்தரங்கிலும்பங்குபற்றுவர்

## தீர்த்தத் திருவிழாவில் உபந்நியாசம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் கருணுகரப் பிள்ளையார் கோயில் தீர்த்தோற்சவம் இன்று பிற்பகல் நடைபெறுகிறது. 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்னும் பொருள் பற்றிச் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உபந்நியாசம் நிகழ்த்துவார். (கொ)

## பயிற்சி

ரேடியோ-ரெலிவிசன் ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் [illegible] நாவலர் அக்கடமி, 11, மொம் [illegible] யாழ்ப்பாணம். 6905

## மரண அறிவித்தல்

### சங்கத்தானை ந. சண்முகராசா

யாழ்ப்பாணம் காளி கோவிலடி கராஜ் உரிமையாளரான நடராசா சண்முகராசா காலமானர். அன்னரின் பூதவுடல் இன்று (24-9-80) புதன்கிழமை பிற்பகல் சாவகச்சேரி, சங்கத்தானையிலுள்ள அன்னரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும். 6915

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் செப். 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GE 8948/78 The Eelanaadu P. B. No. 49.
Telegram Eelanaadu, Phone 389.